<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு பூர்வீகம் என்னவென்றால் திருக்கழுக்குன்றம் வட்டம், விளாகம் கிராமம் ஆகும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். விவசாயத்தை தவிர்த்து வேறு ஏதாவது தொழில் செய்கிறேனா என்றால் யாராவது பணம் கேட்டால் கொடுத்து வாங்குவேன். அவ்வாறு பணத்தை கடனாக கொடுப்பதற்கு உரிமம் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. எனக்கு சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 10 ஏக்கர் நிலம் உள்ளது. பிரதிவாதி ரவிகுமார் என்பவரை எப்படி தெரியும் என்றால் தூரத்து உறவினர். எந்த விதத்தில் உறவினர் என்றால் என் அப்பாவிற்கு அத்தை பேரன் ஆவார். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் பார்மசியில் மேலாளராக இருக்கிறார். பிரதிவாதிக்கு மாத வருமானம் தோராயமாக எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.40,000/- முதல் ரூ.50,000/- வரை இருக்கும். இந்த வழக்கில் அன்பு என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அக்காவின் கணவர் ஆவார். நான் பணம் கொடுத்த சமயத்தில் அவர் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு ரூபாய் 9 லட்சம் பணம் கொடுத்திருப்பதாக சொல்லியுள்ளதில் அந்த பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ஒரே தவணையாக ரொக்கமாக கொடுத்தேன். பிரதிவாதி மேற்படி பணத்தை எனக்கு திருப்பி கொடுத்தாரா என்றால கொடுக்கவில்லை. பணபரிவர்த்தனையின் போது அன்புவின் மூலம் பணம் கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி பணத்தை நான் எந்த காலத்திலும் கொடுக்கவில்லை என்றும், அன்பு தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 23.11.2009 அன்று ரூ.30,000/-மும், 01.03.2010 அன்று ரூ.23,000/-மும், 20.03.2010 அன்று ரூ.20,000/-மும் மற்றும் 19.10.2010 அன்று ரூ.55,000/- திரும்ப கொடுத்துவிட்டார் என்றும், ஆனால் நான் அதை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன தொகைகளை தவிர 7 தவணைகளில் வட்டியாக ரூ.30,000/- பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றும், அதையும் நான் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது ஏற்கனவே பிரதிவாதியிடம் பெற்ற கையொப்பத்தை வைத்து

ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணத்தை வாங்கும்போது 1 சதவீதம் வட்டிக்கு தான் வாங்கினார் என்றும், ஆனால் வா.சா.ஆ.1-ல் 1 1/2 சதவீதம் வட்டி குறிப்பிட்டு பொய்யாக நிரப்பியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் ஊரில் நடந்த பஞ்சாயத்தில் பிரதிவாதி ரூ.6,10,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல. ரூ.6,10,000/-க்கு நான் ஒப்புக்கொண்டேன் என்றும், பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் பணம் கடன் கொடுக்கும் தொழில் செய்யவில்லை என்றும், அன்புவிற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள சங்கதிகளை மறுத்து நான் எதிர் பதிலுரை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் வழக்கில் சொல்லியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை